**செ.வெ. எண்: 552** **நாள்: 21.09.2012**

பத்திரிக்கை செய்தி

ஒருங்கிணைந்த குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டிலுள்ள ஒவ்வொரு மாவட்டத்திலும் (32 மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு சங்கங்களுக்கும்) குழந்தை பாதுகாப்பு சம்பந்தமான தேவைகள் குறித்து ஆய்வு மேற்கொள்ள தீர்மானித்து தமிழ்நாடு குழந்தைகள் பாதுகாப்பு ஆணையத்தின் சார்பாக சமூப் பாதுகாப்புத் துறை அங்கீகரிக்கப்பட்ட மற்றும் விருப்பமுள்ள தன்னார்வ முகமைகள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் கல்வி நிறுவனங்கள் ஆகிய நிறுவனங்களிடமிருந்து விருப்ப வெளியீடுகள் வழங்குமாறு கேட்டுக் கொள்கிறது.

நிரூபிக்கத்தக்க ஆவணங்களைக் கொண்டுள்ள தகுதி வாய்ந்த மற்றும் போதுமான மனித வளம் வாய்ந்த அங்கீகரிக்கப்பட்ட மற்றும் விருப்பமுள்ள தன்னார்வ முகமைகள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் கல்வி நிறுவனங்கள் ஆகிய நிறுவனங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

மேற்படி நிறுவனங்கள் இதில் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகள் தங்களது பொருத்தமாக இருப்பின் வரையறுக்கப்பட்ட படிவத்தில் தங்களது விருப்ப வெளியீடுகள் குறித்த விண்ணப்பத்தை விரிவாக இந்திய அரசு விதிகள் மற்றும் வரையறைகளுக்குட்பட்டு முதன்மை செயலர்/சிறப்பு ஆணையர், 300, புரசைவாக்கம் நெடுஞ்சாலை, கெல்லீஸ், சென்னை.600010 என்ற முகவரிக்கு இந்த அறிவிப்பு வெளியான தினத்திலிருந்து 15 நாட்களுக்குள் (10.10.2012 மாலை 5.45 மணிக்குள்) விண்ணப்பிக்கலாம். வரையறுக்கப்பட்ட படிவம் மற்றும் விளக்கங்களை {HYPERLINK "http://www.tn.gov.in/departments/social"} என்ற இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். தணிக்கை செய்யப்பட்ட விண்ணப்பங்களைக் கொண்ட நிறுவனங்கள் தங்கள் விருப்ப வெளியீடுகளின் விரிவான கருத்துருக்களை குறித்த நேரத்திற்குள் சமர்ப்பிக்க வேண்டும். விருப்ப வெளியீடுகளை ஏற்றுக் கொள்வது மற்றும் நிராகரிப்பது உள்ளிட்டவை தமிழ்நாடு குழந்தைகள் பாதுகாப்பு சங்கத்தின் இறுதி முடிவிற்குட்பட்டதே ஆகும்.

முதன்மை செயலர்/சிறப்பு ஆணையருக்காக

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**